# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# மூன்றாம் பத்து

## ஆறாம் திருமொழி - தூவிரிய
## திருவாலி 2 - தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்

** தூ விரிய மலர் உழக்கித் * துணையோடும் பிரியாதே *
பூ விரிய மது நுகரும் * பொறி வரிய சிறு வண்டே! **
தீ விரிய மறை வளர்க்கும் * புகழாளர் திருவாலி *
ஏவரி வெஞ்சிலையானுக்கு * என் நிலைமை உரையாயே 1

பிணி அவிழு நறு நீல * மலர் கிழியப் பெடையோடும் *
அணிமலர் மேல் மது நுகரும் * அறுகால சிறு வண்டே! **
மணி கெழுநீர் மருங்கலரும் * வயலாலி மணவாளன் *
பணி அறியேன் நீ சென்று * என் பயலை நோய் உரையாயே 2

நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நெடுமால் * தன்
தாராய நறுந்துளவம் * பெருந்தகையேற்கு அருளானே! **
சீராரும் வளர் பொழில் சூழ் * திருவாலி வயல் வாழும் *
கூர்வாய சிறு குருகே! * குறிப்பு அறிந்து கூறாயே 3

தான் ஆக நினையானேல் * தன் நினைந்து நைவேற்கு * ஓர்
மீனாய கொடி நெடுவேள் * வலி செய்ய மெலிவேனோ? **
தேன் வாய வரி வண்டே! * திருவாலி நகராளும் *
ஆனாயற்கு என்னுறு நோய் * அறியச் சென்று உரையாயே 4

வாளாய கண் பனிப்ப * மென்முலைகள் பொன் அரும்ப *
நாணாளும் * நின் நினைந்து நைவேற்கு ** ஓ! மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! * வரை எடுத்த
தோளாளா! * என்தனக்கு ஓர் * துணையாளன் ஆகாயே! 5

தாராய தண்துளவ * வண்டுழுத வரை மார்பன் *
போரானைக் கொம்பு ஒசித்த * புட்பாகன் என் அம்மான் **
தேராரும் நெடு வீதித் * திருவாலி நகராளும் *
காராயன் என்னுடைய * கனவளையும் கவர்வானோ! 6

கொண்டரவத் திரை உலவு * குரை கடல் மேல் குலவரை போல் *
பண்டரவு இன்னணைக் கிடந்து * பார் அளந்த பண்பாளா! **
வண்டமரும் வளர் பொழில் சூழ் * வயலாலி மைந்தா! * என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு * என் கனவளையும் கடவேனோ! 7

** குயில் ஆலும் வளர் பொழில் சூழ் * தண்குடந்தைக் குடமாடீ! *
துயிலாத கண்ணிணையேன் * நின் நினைந்து துயர்வேனோ! **
முயல் ஆலும் இளமதிக்கே * வளை இழந்தேற்கு * இது நடுவே
வயலாலி மணவாளா! * கொள்வாயோ மணி நிறமே! 8

நிலையாளா! நின் வணங்க * வேண்டாயே ஆயினும் * என்
முலையாள ஒரு நாள் * உன் அகலத்தால் ஆளாயே? **
சிலையாளா! மரம் எய்த திறலாளா! * திருமெய்ய
மலை ஆளா! * நீ ஆள வளை ஆள மாட்டோமே 9

** மையிலங்கு கருங்குவளை * மருங்கலரும் வயலாலி *
நெய்யிலங்கு சுடர் ஆழிப் * படையானை நெடுமாலை **
கையிலங்கு வேல் கலியன் * கண்டுரைத்த தமிழ் மாலை *
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு * அருவினைகள் அடையாவே 10

**அடிவரவு:** தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலையாளா மையிலங்கு கள்வன்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---